9

# தமிழ் ஈழ விடுதலை இயக்கம்

## அமைப்பு விதிகள்(யாப்பு)

01) கட்சியின் பெயர் :- தமிழ் ஈழ விடுதலை இயக்கம்

02)இலட்சினை :- 20 பற்களைக்கொண்ட சக்கரமொன்றின் நடுவே கடலில் பாய்மரக்கப்பல் ஒன்று நிற்பதைப்போலவும், சக்கரத்தின் உள் வட்டமாக இரண்டு நெற்கதிர்களும், வானிலே முழு அளவிலான சூரியன் தோற்றமளிப்பது போலவும்,தரையில் மூன்று பனை மரங்கள் காட்சியளிப்பதை போலவும், பற்சக்கரங்களுக்கு மேலாக தமிழ் ஈழ விடுதலை இயக்கம் என தமிழிலும், ரி.ஈ.எல்.ஓ(TELO) என ஆங்கிலத்திலும் எழுதப்பட்டிருக்கும்.

03)கொடி :- சிவப்பு,வெள்ளை,பச்சை,ஆகிய வர்ணங்களைக் கொண்டதாக இருக்கும். சிவப்புநிறம் மேல்பகுதியிலும், வெள்ளை நிறம் நடுப்பகுதியிலும், பச்சை நிறம் கீழ் பகுதியிலும் சமஅளவில் இருக்கும். கொடியின் நீள,கலம் 3:2 என்ற அளவிலும் இருக்கும்.

04)தேர்தல் சின்னம் :- வெளிச்ச வீடு

05)இலட்சியம் :- தமிழ்த் தேசிய இனத்தின் பிறப்புறிமையான சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் இலங்கையில் தமிழ் தேசிய இனம் தன்னைத்தானே ஆளக்கூடியதாக ஓர் சுயாட்சி அரசினை சமதர்ம சமுதாயத்தினைக் கொண்டதாக தமிழ் தேசிய இனத்தின் மரபுவழித்தாயகமான வட கீழ் மானிலத்தில் அமைத்து அதனைப்பேணிப்பாதுகாப்பதுடன், எமது மரபு வழித்தாயகத்திற்கு வெளியே வாழும் தமிழ் தேசிய இன மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதும் இயக்கத்தின் இலட்சியமாகும்.

06)அங்கத்துவம் :- இலங்கையை பூர்வீகமாகக்கொண்ட பதினெட்டு(18) வயதுக்கு மேற்பட்ட தமிழைத் தாய்மொழியாகக்கொண்ட எவரும் இயக்கத்தின்(கட்சியின்) உறுப்புரிமையைப்பெற தகுதியுடையவராவர்.

07)கட்சியின் கட்டமைப்பு :- இக்கட்சி

1) மாவட்ட குழுக்களும், சர்வதேச கிழைக்குழுக்களும்.
2) பொதுக்குழு
3) மத்தியகுழு
4) தலைமைக்குழு
5) அரசியற் குழு

ஆகிய (5) ஐந்து மட்ட ஸ்தாபன தலைமையைக் கொண்டிருக்கும்.

7.1) மாவட்ட குழுக்களும், சர்வதேச கிழைக்குழுக்களும்.
வடக்குக் கிழக்கு மாகாணங்களிலுள்ள

1. திருகோணமலை மாவட்டம்
2. மட்டக்களப்பு மாவட்டம்
3. அம்பாறை மாவட்டம்
4. வன்னி மாவட்டம்
5. யாழ்ப்பாணம் மாவட்டம்
6. சர்வதேச கிளைக்குழு(சர்வதேச நாடுகளில்) ஆகிய ஆறு(06) இடங்களிலும் இக்குழுக்கள் இயங்கும்.

K.MAHENTHIRAN
Secretary General
Tamil Eelam Liberation Organization
TELO

7.1 (அ) மாவட்டக்குழுக்கள் என்பவை மாவட்ட பொதுக்குழு, மாவட்ட செயற்குழு என்பனவாகும்.

(ஆ) அந்தந்த தேர்தல் மாவட்டங்களைப் பிறப்பிடமாகக் கொண்ட அல்லது நிரந்தர வசிப்பிடமாகக்கொண்ட சகல உறுப்பினர்களும் மாவட்டப்பொதுக்குழுவில் அங்கம் வகிப்பர்.

(இ) மாவட்டப்பொதுக்குழு ஆகக்குறைந்தது மூன்று (3) மாதத்துக்கு ஒரு தடவையாவது கூட்டப்படல்வேண்டும்.

(ஈ) மாவட்டப்பொதுக்குழு உறுப்பினர்களில் இருந்து மாவட்ட செயற்குழு உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்படுவார்கள். மாவட்ட செயற்குழுவிற்கு எத்தனை உறுப்பினர்கள் தெரிவுசெய்யப்பட வேண்டும். என்பதனை சம்மந்தப்பட்ட மாவட்ட பொதுக்குழுக்கள் முடிவுசெய்யும்.

(உ) மாவட்ட செயற்குழு மாதம் ஒரு தடவையாவது கூட்டப்படவேண்டும்.

(ஊ) ஒவ்வொரு மாவட்டப்பொதுக்குழு உறுப்பினர்களில் இருந்தும் கட்சியின் பொதுக்குழுவிற்கு தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களின் தொகை பின்வருமாறு அமையும்.

1. திருகோணமலை தேர்தல் மாவட்டம்-08
2. மட்டக்களப்பு தேர்தல் மாவட்டம்-16
3. அம்பாறை தேர்தல் மாவட்டம்-08
4. வன்னித்தேர்தல் மாவட்டம்-16
5. யாழ்ப்பாண தேர்தல் மாவட்டம்-24

ஐந்து தேர்தல் மாவட்டங்களில் இருந்தும் 72 உறுப்பினர்கள் பொதுக்குழுவிற்கு தேர்ந்தெடுக்கப்படுவார்கள். ஆயினும் வன்னித்தேர்தல் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் அதில் அடங்கியுள்ள வவுனியா, முல்லைத்தீவு நிர்வாக மாவட்டத்திற்கு தனியாகவும், மன்னார் நிர்வாக மாவட்டத்திற்கு தனியாகவும் மாவட்டப் பொதுக்குழுக்களும், மாவட்ட செயற்குழுக்களும் இயங்கும்.

(எ) மாவட்டச்செயலாளர்கள்,அம் மாவட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் (அந்த மாவட்த்திலுள்ள கட்சியின் சகல உறுப்பினர்களும்) மத்தியில் இருந்து தெரிவு செய்யப்படுவார்கள். இதைப்போல் மாவட்டச்செயலாளர்களுக்கு உதவியாக துணை மாவட்டச் செயலாளர்களும் தெரிவுசெய்யப்படுவார்கள்.

(ஏ) அந்தந்த மாவட்டத்திலுள்ள அரசியல்,சமூக மற்றும் ஸ்தாபன நடவடிக்கைகள் மாவட்டச் செயலாளர்கள் பொறுப்பில் இருக்கும்.

(ஒ) சர்வதேச கிளைக்குளுக்களில் இருந்து கட்சியின் பொதுக்குழுவுக்கு இருபது(20) உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

7.2 பொதுக்குழு :- தேர்தல் மாவட்ட அடிப்படையில் கட்சியின் உறுப்பினர்கள் மத்தியில் இருந்து ஐந்து தேர்தல் மாவட்டங்களில் இருந்தும் தெரிவுசெய்யப்பட்ட எழுப்த்திரெண்டு(72) பொதுக்குழு உறுப்பினர்களுடன் சர்வதேச கிழைகளில் இருந்து தெரிவுசெய்யப்படும் இருபது(20) உறுப்பினர்களும் கூடி மேலும் முப்பத்தொன்பது (39) உறுப்பினர்களை தேசியப்பட்டியல் அடிப்படையில் தெரிவுசெய்வார்கள். பொதுக்குழுவில் மொத்தம் நூற்றுமுப்பத்தொன்று (131) பேர் அங்கம் வகிப்பார். இக்குழு கட்சியின் கொள்கை வகுப்பு உட்பட சகல முடிவுகளையும் மேற்கொள்ளும்.

(அ) தலைவர், செயலாளர் நாயகம், தேசிய அமைப்பாளர், நிதிச் செயலாளர், உபதலைவர்கள் இருவர், நிர்வாகச் செயளாளர், பிரசாரச் செயளாளர், சர்வதேச கிளைகள் அமைப்பாளர், தலைமைக்குழு உறுப்பினர்கள் ஏழு (07) பேர் உட்பட முப்பத்தொன்பது (39) மத்திய குழு உறுப்பினர்கள் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் பொதுக்குழு உறுப்பினர்களில் இருந்து தெரிவு செய்யப்படுவார்கள்.

K.MAHENTHIRAN
Secretary General
Tamil Eelam Liberation Organization
TELO

(ஆ) மத்திய குழுவிற்கு பணிப்புரைகளை வழங்கவும் தேவைப்படுமிடத்து மத்திய குழுவின் செயற்பாடுகளை மறு பரிசீலனை செய்து முடிவெடுக்கும் அதிகாரம் கொண்டதாகவும் இருக்கும்.

(இ) பொதுக்குழு ஆகக்குறைந்தது மூன்று (03) மாதங்களுக்கு ஒரு தடவை கூட்டப்படல் வேண்டும்.

(ஈ) தகுந்த காரணமின்றி தொடர்ந்து மூன்று சாதாரண பொதுக்குழு கூட்டங்களுக்கு சமூகமளிக்கத்தவறும் உறுப்பினர்கள் தமது உறுப்புரிமையை இழப்பர்.

(உ) சாதாரண பொதுக்குழு கூட்டத்திற்கான முன்னறிவித்தல் இரண்டு வாரங்களுக்கு முன்னர் அனுப்பப்படல் வேண்டும்.

(ஊ) அவசர பொதக்குழு கூட்டம் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்ட விடயம் அல்து விடயங்களையேமட்டும் ஆராய முடியும்.

(எ) அவசர பொதுக்குழு கூட்டத்திற்கான முன்னறிவித்தல் ஒரு (01) வாரத்திற்கு முன்னர் கட்சியின் செயலாளர் நாயகத்தினால் பொதுக் குழு உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.

(ஏ) கூட்டத்திற்கான கோரம் நாற்பதைந்து (45) உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

(ஐ) பொதுக்குழு உறுப்பினர்களில் குறைந்தது நாற்பதைந்து (45) பேர் எழுத்து மூலம் கோருமிடத்து அத்தகைய் கோரிக்கை கிடைத்து ஒரு மாதத்துக்குள் பொதுக்குழு கூட்டப்படல்வேண்டும்.

7.3 மத்தியகுழு :-

(அ) கட்சியின் பொதுக்குழுவில் இருந்து தெரிவுசெய்யப்ப்டும் தலைவர்,செயலாளர் நாயகம்,உபதலைவர்கள் இருவர் (02), தேசிய அமைப்பாளர், பொருளாளர், நிருவாகச்செயலாளர், பிரச்சாரக்செயலாளர், சர்வதேச கிளைகள் அமைப்பாளர், தலைமைக்குழு உறுப்பினர் ஏழு (07) பேர் உட்பட முப்பத்தொன்பது(39)பேர் மத்திய குழுவில் அங்கம் வகிப்பர்.

(ஆ) அக்கூட்டத்திற்கான கோரம் பதினைந்து (15) இருக்கும்.

(இ) இரண்டுமாதங்களுக்கு ஒருமுறையாவது இக்குழு கூட்டப்படல்வேண்டும்

(ஈ) குறைந்தது பதினைந்து (15) உறுப்பினர்கள் எழுத்து மூலம் கோரும் கோரிக்கை கிடைத்த இரண்டு வாரங்களுக்குள் செயலாளர் நாயகத்தினால் கூட்டம் கூட்டப்படல் வேண்டும்.

(உ) சாதாரண,அவசர மத்திய குழு கூட்டங்களுக்கு முறையே ஒரு (01) வாரம், மூன்று (03) நாட்கள் முன்னறிவித்தல் கொடுக்கப்படல்வேண்டும்.

(ஊ) தகுந்த காரணம் இன்றி மூன்று (03) சாதாரண மத்திய குழுக்கூட்டங்களுக்கு தொடற்சியாக சமூகம் தராத உறுப்பினர்கள் தமது உறுப்புரிமையை இழப்பார்கள். ஒவ்வொரு மாவட்டச் செயலாளர்களும் துணை மாவட்டச் செயலாளர்களும் மத்திய குழுவில் இடம்பெறவேண்டும்.ஆனால் வன்னித் தேர்தல் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் வவுனியா-முல்லைத்தீவு நிர்வாக மாவட்டச் செயலாளரும்,மன்னார் மாவட்டச் செயலாளரும் மத்திய குழுவில் இடம்பெறுவர்.

(எ) எந்தவொரு மாவட்டச் செயற்குழுவையும் கலைக்கவோ அல்லது இடைநிறுத்தவோ மத்திய குழுவிற்கு அதிகாரம் உண்டு. மேலும் இவ்வாறே எந்தவொரு மாவட்டச்செயலாளரையும் இடைநிறுத்தி பதில் நியமனம் செய்ய மத்திய குழுவிற்கு அதிகாரம் உண்டு.

(ஏ) காரணம் எதுவும் காட்டாமல் கட்சியின் அங்கத்துவ விண்ணப்பம் எதையும் நிராகரிக்கும் உரிமை மத்திய குழுவிற்கு உண்டு.

7.4 தலைமைக்குழு:-

(அ) இக்குழுவில் தலைவர்,செயலாளர் நாயகம், தேசிய அமைப்பாளர், நிதிச் செயலாளர், உபதலைவர்கள் இருவர் (02), நிர்வாகச் செயலாளர், சர்வதேச கிழைகள் அமைப்பாளர் ஆகியோருடன் பொதுக்குழுவினால் தலைமைக்குழுவிற்கு உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்படும் ஏழு (07) பேர் உட்பட பதினைந்து (15) பேர் அங்கம் வகிப்பர்.

K.MAHENTHIRAN
Secretary General
Tamil Eelam Liberation Organization
TELO

(ஆ) இக்குழுவிற்கு ஸ்தாபனம், அரசியல் சம்மந்தமான அவசர, அவசிய முடிவுகளை எடுக்கும் அதிகாரம் உண்டு.

(இ) கட்சிக்கான தலைமை இக்குழுவின் கூட்டுப்பொறுப்பில் இருக்கும்.

7.5 அரசியல் குழு :- கட்சியின் அரசியல் நடவடிக்கைகளை கையாளும். இக்குழுவிற்கு 15 பேர் கொண்ட தலைமைக்குழுவிலிருந்து ஏழு (07) பேர் தெரிவு செய்யப்படுவார்கள்.

## 08) கட்சியின் நிருவாகிகள் :-

8.1 தலைவர் :- கட்சியின் ஸ்தாபன தலைமைதலைவரால் பிரதிநிதித்துவப்படுத்தப்படும்.

8.2 செயலாளர் நாயகம் :- கட்சியின் ஸ்தாபனம், அரசியல் நடவடிக்கைகளை ஒருங்கினைப்பதுடன் தலைமைக்குழு, அரசியல் குழு, மத்தியகுழு, பொதுக்குழு என்பனவற்றைக் கூட்டுவது இவரது பொறுப்பாகும்.

8.3 தேசிய அமைப்பாளர் :- கட்சி கிளைகளை தேசிய ரீதியாக அமைத்தல், வளர்த்தல் இவர் கடைமையாகும்.

8.4 நிதிச் செயலாளர் :- நிதிதொடர்பான நடவடிக்கைகளுக்கு இவர் பொறுப்பாக இருப்பார்

(அ) கட்சியின் நிதிக்கான வங்கிக்கணக்கு தலைவர், செயலாளர் நாயகம், நிதிச் செயலாளர், ஆகிய மூவரின் பெயரில் இருக்கும்.

(ஆ) நிதி பற்றிய கணக்கு பரிசீலனை மாதாமாதம் தலைமைக்குழுவினால் பரிசீலனை செய்யப்பட்டு மத்தியகுழு,பொதுக்குழுவின் அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

8.5 உப தலைவர்கள் இருவர் (02) :- தலைவருக்கு உதவியாக உபதலைவாகள் கடைமையாற்றுவார்கள்.

8.6 நிர்வாகச் செயலாளர் :- கட்சியின் நிர்வாகச் செயற்பாடுகளுக்கு இவர் பொறுப்பாக இருப்பார். இவர் செயலாளர் நாயகத்தின் கீழ் செயற்படுவார்.

8.7 பிரசாரச் செயலாளர் :- இவர் கட்சியின் பிரசார நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருப்பார்.

8.8 சர்வதேச கிளைகள் அமைப்பாளர் :- இவர் கட்சியின் சர்வதேச நடவடிக்கைகளுக்கு பொறுப்பாக இருப்பார்.

8.9 கட்சியின் தலைமைக்கான கூட்டுப் பொறுப்பு தலைவர், செயலாளர் நாயகம், தேசிய அமைப்பாளர், நிதிச் செயலாளர், உபதலைவர்கள் இருவர் (02) ,நிர்வாகச் செயலாளர், சர்வதேச கிழைக்ள் அமைப்பாளர், தலைமைக்குழு உறுப்பினர்கள் ஏழு (07) பேர் உட்பட பதினைந்து (15) பேரிடம் இருக்கும்.

## 09)பதவிக்காலம் :-

9.1 கட்சித் தேர்தல் ஒரு வருடத்துக்கு ஒருமுறை நடைபெறவேண்டும்.

9.2 நிர்வாகிகள் உட்பட பொதுக்குழு, மத்தியகுழு, தலைமைக்குழு, அரசியற் குழு தெரிவுகளைத் தொடர்ந்து ஒரு மாதத்திற்குள் தேசிய மாநாடு நடைபெற வேண்டும்.

## 10)அமைப்பு விதிகளில் திருத்தம்:-

10.1 இந்த அமைப்பு விதிகளுக்கான திருத்தங்கள் பொதுக்குழு கூட்டத்திற்கு ஆகக்குறைந்தது ஒரு மாத காலத்துக்கு முன்னர் எழுத்து மூலம் செயலாளர்நாயகத்திடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

10.2 இந்த அமைப்பு விதிகளில் திருத்தங்களையோ அல்லது மாற்றங்களையோ செய்வதாயின் பொதுக்குழு உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையில் மூன்றில் இரண்டு(3/2 பங்கினர் அங்கிகாரம் பெறப்படல் வேண்டும்.

K.MAHENTHIRAN
Secretary General
Tamil Eelam Liberation Organization
TELO